**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI &
Global Indexing | Google Scholar Impact Factor
Issue DOI: https://doi.org/10.63300/tirjts06012026
https://ngmtamil.in/

# Realist Political Discourse in the Novels of S. Arshiya

**Saravanan K[1*], Dr.Parameshwari T[2],**
[1]Ph.D Research Scholar (Part - time), Department of Tamil, N.G.M. College, Pollachi.
[2]Associate Professor & Head, Department of Tamil (SF), N.G.M. College, Pollachi.
Email: parameshwarit78@gmail.com, Mobile: 9600290032
*Correspondence: saravananakdr@gmail.com. Tel: 9150098825

**Article Info**
Received on 22-April-2026, Revised on 22-April-2026, Accepted on 29-April-2026, Published on 01-May-2026

## ABSTRACT

This study explores the nature of realist political discourse in the novel Sottangal by S. Arshiya. It critically investigates the tension between democratic ideals and lived political practices, with particular attention to party-centered propaganda, uncritical leader worship, ideological inconsistency, caste- and religion-based mobilization, politically sanctioned violence, and institutional compromise within law enforcement and the judiciary. Adopting a qualitative, text-oriented analytical framework, the study approaches these novels as interpretive representations of socio-political realities rather than as empirical historical accounts. The analysis demonstrates that democratic participation is frequently transformed into performative spectacle, while the preservation of power becomes the dominant organizing principle of political conduct. By engaging both realist and existential perspectives, these novels emerge as significant literary sites that document and critique contemporary political culture in Tamil Nadu.

***KEYWORDS:*** *Realism, Democracy, Political Performance, Caste Politics, Institutional Power, Violence.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.

*Kalanjiyam International Journal of Tamil Studies* **E-ISSN 2456-5148**
Volume 6 | Issue 01, May 2026 Online: www.ngmtamil.in

# எஸ். அர்ஷியாவின் புதினங்களில் நடப்பியல் அரசியல்

**[1]சரவணன் க*, [2]முனைவர் பரமேஸ்வரி த,**

முனைவர் பட்ட ஆய்வு மாணவர் (பகுதி நேரம்), தமிழ்த்துறை,

நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி (N.G.M.), பொள்ளாச்சி.

இணைப் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர், தமிழ்த்துறை (சுயநிதிப் பிரிவு),

நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி (N.G.M.), பொள்ளாச்சி.

மின்னஞ்சல்: parameshwarit78@gmail.com | அலைபேசி: 9600290032

*தொடர்பு கொள்ள வேண்டிய ஆசிரியர்: saravananakdr@gmail.com | அலைபேசி: 9150098825

**சுருக்கம்**

எஸ். அர்ஷியா அவர்களின் புதினத்தில் வெளிப்படும் நடப்பியல் அரசியல் சிந்தனைகளை ஆய்வு செய்வதாக இக்கட்டுரை அமைகிறது. குறிப்பாக சொட்டாங்கல் புதினம் ஆய்வின் மையமாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. ஜனநாயக இலட்சியங்களுக்கும் நடைமுறை அரசியல் செயல்பாடுகளுக்கும் இடையிலான முரண்பாடுகள், கட்சிப் பரப்புரை, தலைவர்களின் போலித்தன்மை, சாதி – மத அரசியல் வளர்ச்சி, அரசியல் ஆதரவுடன் நிகழும் வன்முறை, நீதித்துறையில் அரசியல் தலையீடு போன்ற அம்சங்கள் இப்புதினத்தில் எவ்வாறு பிரதிபலிக்கப்படுகின்றன என்பதே இவ்வாய்வின் நோக்கமாகும். நடப்பியல் மற்றும் மீமெய்ம்மையியல் கோணங்களில் சமூக–அரசியல் நிகழ்வுகளை சித்தரிக்கும் இவரது படைப்புகள் சமகால தமிழக அரசியலின் ஆவணங்களாகத் திகழ்கின்றன.

**முக்கிய சொற்கள்:** நடப்பியல், ஜனநாயகம், கட்சிப் பரப்புரை, சாதி அரசியல், அரசியல் வன்முறை.

**முன்னுரை**

ஜனநாயகம் மக்களால், மக்களுக்காக, மக்களே நடத்தும் ஆட்சி முறை என வரையறுக்கப்படுகிறது. ஆனால் அதன் நடைமுறை, அமலாக்கம் போன்றவை பல்வேறு அரசியல் சிக்கல்களால் பாதிக்கப்படுகிறது. இலக்கியம் சமூகத்தின் பிரதிபலிப்பாக அமைவதால், அரசியல் முரண்பாடுகளையும் அது வெளிப்படுத்துகிறது.

தமிழ் நவீனப் புதினங்களில் அரசியல் சிந்தனை முக்கிய இடம் பெற்றுள்ளது. இவ்வகையில் எஸ். அர்ஷியாவின் புதினங்கள், தமிழக அரசியல் சமூகத்தின் பல அடுக்குகளை விமர்சன ரீதியாக வெளிப்படுத்துகின்றன.

புதினங்களில் காணப்படும் அரசியல் நடப்பியல் அம்சங்களை அடையாளம் காணுதல். ஜனநாயக இலட்சிய–நடைமுறை முரண்பாடுகளை விளக்குதல்.

சாதி, மத மற்றும் கூட்டணி அரசியலின் இலக்கிய பிரதிபலிப்பை ஆராய்தல்.

அரசியல் ஆதரவுடன் வளர்கின்ற வன்முறைச் செயல்களை பகுப்பாய்வு செய்தல்.

இவ்வாய்வு விளக்கவியல் மற்றும் உரைநடை பகுப்பாய்வு முறையை அடிப்படையாகக் கொண்டது. முதன்மை ஆதாரமாக சொட்டாங்கல் புதினம் பயன்படுத்தப்பட்டுள்ளது. அரசியல் சம்பவங்கள் வரலாற்று ஆவணங்களாக அல்லாது இலக்கிய பிரதிபலிப்புகளாக அணுகப்பட்டுள்ளன.

Copyright © Author(s), Article DOI: https://doi.org/10.63300/tirjts06012026 

**கட்சிப் பரப்புரை மற்றும் கண்மூடித் தலைவர் பற்று**

சொட்டாங்கல் புதினத்தில் அரசியல் கூட்டங்கள், கொள்கை விளக்க மேடைகளாக இல்லாமல் காட்சிப் பொழுதுபோக்கு அரங்குகளாக சித்தரிக்கப்படுகின்றன. கட்சித் தொண்டர்கள் தலைவர்களின் மீது அளவில்லாத பற்றுடன் செயல்படுகின்றனர்.

**“வேர்விடாத இவற்றுக்கு**

**வேர்வைப் பூவாளிகள் தாம் எத்தனை”** ( அப்துல் ரகுமான், பால்வீதி, ப. 91)

என்ற கவிதை வரிகள் உண்மைத்தொண்டனாக இருப்பவர்கள், தலைவனுக்காக அல்லது கொள்கைக்காக தீக்குளித்தல் போன்ற செயல்களில் ஈடுபடுகின்றனர். ஆனால் தூண்டிவிடும் தலைவர்கள் சுகமாய் இருக்கிறார்கள் என்ற அரசியலை தோலுரித்துக் காட்டுவதாக அமைகின்றது.

“வெளியே தர்ஹாவிலிருந்து நேரே சென்று வடக்கேயும் தெற்கேயுமாய் பிரியும் சாலையைப் பார்த்தபடி எதிர்க்கட்சியின் பிரச்சாரக் கூட்ட மேடை அமைக்கப்பட்டு, பாடல்கள் ஒலித்துக்கொண்டிருந்தன. அக்கட்சித்தலைவரின் வாழ்க்கை வரலாறு, பிரிக்கப்பட்ட பல கட்டங்களாய் கனத்த, கரகரத்த குரலில் இலக்கியமாய் இளகி வழிந்தது. மரித்த பின்பும் நினைவில் நிற்கும் குரலாய் அது இருந்தது. மினாராக்களில் அடைந்திருந்த புறாக்கள் அக்குரலில் கவனம் பெற்று வெளியே வந்து சிறகடித்தன. பரிதவித்துத் திரிந்தன. பிறகு அக்கட்சியின் தலைவர், தனது தலைவரின் இறப்பில், 'இரவலாய் இதயத்தைக் கேட்டு, தான் வரும்போது, அதைத் திருப்பித் தந்து விடுவதாய்' பிராமிசரி நோட்' வாசித்த கடன் கவிதை இரைச்சலுடன் ஓடியது. நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக தேயத்தேய ஒட்டப்பட்ட சுழல் தட்டிலிருந்து குறுவட்டாகி, இப்போது பென்டிரைவிலும் அதே குரல்” (சொட்டாங்கல், ப. 28)

எனும் வரிகள் மூலம் அர்ஷியா அரசியல் கட்சிப் பிரச்சாரங்களில் ஈடுபடும் தொண்டர்களை அடையாளங்காட்டியுள்ளார்.

மேடை நாகரிகம் சிதைந்து, எதிர்கட்சியை இழிவுபடுத்தும் உரைகள் முக்கிய இடம் பெறுகின்றன. மக்கள் கொள்கைக்காக அல்லாது பொருளாதார ஆதாயத்திற்காக கூட்டங்களில் பங்கேற்கும் நிலை சித்தரிக்கப்படுகிறது. இது ஜனநாயகப் பங்கேற்பின் சிதைவைக் காட்டுகிறது.

“ அரசியல் முறைமை தன்னில் அணிந்திட வேண்டும் தூய்மை”

(பாவலர் வையவன், மனசு சுற்றிய மாவளி, ப. 57)

என்ற வரிகளின் மூலம் அரசியல் துறையில் பேண வேண்டிய தூய்மைத்தன்மை எடுத்துரைக்கப்பட்டது. ஆனால் அத்தூய்மைத்தன்மை அரசியலில் பேணப்படுவதில்லை.

“புறாக்கள் இருப்பிடம் திரும்பியிருந்தன. அடுத்ததாக, தமிழகச் சிறைச்சாலைகளில் பாம்புகளும் பல்லிகளும் கைதிகளுடன் வாழும் நிலையையும் அவற்றுடன் தனது தலைவன் வசித்த பெருமையையும் ஒருவன் பகடியாய்ப் பாடி பெருமைபட்டுக் கொண்டிருந்தான். சிறிது நேரத்தில் கூட்டம் தொடங்கிவிடுவதற்கான மும்முரத்தை ஏற்பாட்டாளர்கள் உருவாக்;கிக் கொண்டிருந்தார்.” (சொட்டாங்கல், ப.29)

என்று நாகரிகமற்ற மேடையாக அரசியல் மேடை மாறிவிட்டதை எடுத்துக்காட்டியுள்ளார்.

**தலைவர்களின் போலித்தன்மை மற்றும் கூட்டணி அரசியல்**

அரசியலில் நிலைநிறுத்திக் கொள்ளும் நோக்கில் தலைவர்கள் கொள்கைகளை மாற்றிக் கொள்வது புதினங்களில் விமர்சனமாக சித்தரிக்கப்படுகிறது. கூட்டணிகள் தேர்தல் தேவைக்கேற்ப உருவாகி கலைந்து விடுகின்றன.

எதிர் கட்சியான தி.மு.க.வும் இந்திரா காங்கிரசும் கூட்டணி அமைத்து போட்டியிட்டு தன் கணக்கு தப்புகணக்காக மாறி தோற்றனர். ஜனதா கட்சியின் பிரிவுகள் அனைத்தும் சட்டமன்றத் தேர்தலில் தனித்துப் போட்டியிட்டன. இந்நிகழ்வை அர்ஷியா தனது சொட்டாங்கல் புதினத்தில் பதிவு செய்துள்ளார்.

> "ஆராவமுதன் சிகை திருத்தகத்தில் நாலைந்து பெருசுகள் தினத்தந்தி பேப்பரை மேய்ந்து கொண்டிருந்தன. ஒரு செய்தியைப் படித்ததும் அதற்கு வியாக்கியானம் வேறு நடந்தது. 'நிப்பாட்டு நிப்பாட்டு எம.ஜி.ஆர் என்ன பண்ணீட்டாருங்க்ற? எழுவத்தேழு எம்பதுல அவர் ஆட்சியில் ஊழலே இல்லன்னு நீ சொல்றத நான் ஒத்துக்கிறேன். அந்த ஆட்சில அவரு என்ன செஞ்சாரு? ஏதாவது செஞ்சுந்தாருன்னாதானே ஊழல் நடக்கும். மக்களுக்கு எதுவுமே செய்யாம, ஊழல் இல்லாத ஆட்சி… ஊழல் இல்லாத ஆட்சினு பீத்திக்கிட்டா எப்டி? மூணுவருசத்துல மேலருந்து கலைச்சுவிட்டுட்டானுக. ஒடனே எம்பது எலக்ஷன் பிரச்சாரத்துல 'நான் என்ன தவறு செய்தேன்?'னு மக்கள்ட்ட சினிமா அழுகை அழுது ஜெயிச்சுட்டாரு. இத்தனை நாள் கை அரிப்பை பொறுத்துக்கிட்டவங்க… இனியும் சும்மாயிருப்பாய்ங்கங்க்ற? பாக்கத்தானே போறோம். உறை நல்லா இருந்தா மட்டும் போதாது, மச்சான். உள்ளுக்குள்ள சுளையும் நல்லா இருக்கணும்" (சொட்டாங்கல், ப.68)

என்று அர்ஷியா அரசியல் முடிச்சுகள் பலவற்றை வெளிப்படையாகக் கூறியுள்ளார். உணர்ச்சி ரீதியான தேர்தல் பரப்புரைகள் மூலம் மக்களிடம் அனுதாபம் பெறும் அரசியல் நடைமுறை வெளிப்படுகிறது. அதிகாரம் பாதுகாப்பதே முக்கிய நோக்கமாக மாறியுள்ளது.

**சாதி மற்றும் மத அரசியல்**

சமகால அரசியலில் சாதி – மத அடிப்படையிலான இயக்கங்கள் முக்கிய பங்காற்றுகின்றன. உரிமை மறுக்கப்பட்ட சமூகக் குழுக்கள் அரசியல் வழியே நலன்களை நாடுகின்றன. ஆனால் அரசியல் அமைப்புகள் தாமே புதிய அதிகார மையங்களாக மாறுகின்றன. மக்களிடம் தங்களது அரசியல் பணிகளை மையமிட்டு வாக்கு சேகரிக்காமல், சாதி, மதம் இவற்றை தங்களது வாக்கு வங்கிகளாக, ஆயுதங்களாக பயன்படுத்துகின்றனர்.

மதரீதியாக மக்களை அணுகும் கட்சிகள் மட்டும் தான் தமிழகத்தில் இருக்கின்றதா இல்லை. சாதிரீதியாகவும் அணுகும் கட்சிகளும் உள்ளன என்று அதையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

> "ஆட்டையப் போட்ட ஆளுங்கட்சிக்காரன் நம்ம கட்சி வார்டு செகரட்டரிக்கு சொந்தக்காரன். அதனால வாயத் தெறக்க மாடடேங்க்கிறாரு. புதுசா மொளைச்சு இருக்குற சாதியமைப்பு, பிரச்சனைய கைல எடுத்துருக்கு. அதை வந்து பார்ட்டில சொன்னா, 'அது நம்மவார்டுல இல்லனு தள்ளிவிடுறாங்க. என்ன செய்யச் சொல்றீங்க? புது ஆளுங்க ரெண்டு எடத்துல

மறியல் பண்ணீட்டாங்க. பாருங்க....கொஞ்ச நாள்ல அந்த சாதிக்கட்சி வளர்ந்துரும்." (சொட்டாங்கல், ப218)

என்று சாதிக்கட்சிகள் தான் பெருமளவு வெற்றி பெற்ற கட்சியாகச் செயல்படுகிறது என்ற தனது கருத்தைப் பதிவு செய்துள்ளார். இவ்வாறு ஜனநாயக அமைப்பு சமூகப் பிளவுகளைத் தீர்க்காமல், பல்வேறு அடையாள அரசியல்களை உறுதிப்படுத்துகிறது.

**அரசியல் ஆதரவு மற்றும் வன்முறை**

நகர வாழ்க்கையில் நில அபகரிப்பு, ரவுடியிசம், அச்சுறுத்தல் போன்றவை அரசியல் ஆதரவுடன் நடைபெறுகின்றன என்பதைக் கதாப்பாத்திரங்களின் வழி ஆசிரியர் வெளிப்படுத்துகிறார்.

**" கட்சிக் கொள்ளையில் கிடைத்த**
**கமிஷன் பங்கீட்டுப் பிரச்சனையில்**
**செத்தார்கள் வெட்டிக் கொண்டு**
**செங்குட்டுவனும் இளங்கோவனும்"( மீரா. ஊசிகள், ப. 69)**

என்ற ஊசி வரிகளுக்கேற்ப அரசியல்வாதிகள் வன்முறைக் கலாச்சாரத்தின் ஒட்டுமொத்த குத்தகைதாரர்களாக இயங்குகின்றனர் எனலாம்.

மதுரை தமிழகத்தின் புண்ணியத்தலங்களில் ஒன்றாகக்கருதப்படும் சிறப்பு பெற்ற தலம். ஆனால் இன்று அராஜகம், கொலை, கொள்ளை போன்ற காரியங்கள் செய்யும் ரவுடிகளின் கூடாரமாக மாறிவிட்டது. அப்படி தவறு செய்பவர்களை கண்டிக்கும் உரிமை காவல்துறைக்குக் கூட இல்லை. காரணம் அவர்கள் அரசியல் கட்சித் தலைவர்களின் ஆதரவில் செழித்து வாழ்கின்றனர். ரவுடியிச செயல்பாடுகள் மதுரை மட்டுமல்ல அனைத்து இடங்களிலும் பெருகிவிட்டது. காவல்துறையினர் கைகள் கட்டிப்போடப்பட்டுள்ளன. அவர்கள் சுதந்திரமாக செயல்பட இயலா நிலை உருவாகியுள்ளது. இது போன்ற நிகழ்வுகளை நாம் திரைப்படங்களில் பார்த்திருப்போம். ஆனால் தற்பொழுது உண்மையிலேயே நடக்கிறது என்ற அர்ஷியாவின் வேதனை சொட்டாங்கல் படைப்பின் மூலம் புலனாகியுள்ளது.

"மதுரை பிகேம் ஒர்ஸ்ட் நான் படிச்சுருக்கேன். இது, ரொம்ப அருமையான, அமைதியான, அழகான நகரம்னு. எங்க தாத்தா பாட்டியெல்லாம் மதுரை, ராமேஸ்வரம்,கன்னியாகுமரி பத்தி பல கதைகள் சொல்லிருக்காங்க. ஆனா பாருங்க, வரலாற்றுப் போர்களைக் காட்டிலும் ரொம்ப மோசமா இருக்குது, இந்த பீபிள்ஸோட ஆட்டிடியூட். ஒரு டிவைன்சிட்டிய இப்படி டெஸ்டிராய்ட் பண்ணிக்கிட்டுருக்காங்க. எனக்கு ரொம்ப கஷ்டமாருக்கு. போலீஸ் இன்டிவிஜீவலா ஆக்ட்பண்ண முடியல. நில அபகரிப்பு தான் இப்ப இங்கே முக்கியப் பிரச்சனையா இருக்கு. அதுக்கு பேக்போனா இருக்குறது ரவுடியிஸம்ங்க்கற பேர்ல அட்ராசிடி. பொலிடிசியன், போலீஸ், ஆமா... போலீஸீம் இந்த அட்ராசிடியை வளத்துவிடுது. இப்ப ரவுடினு ஒரு பயந்தாங்கொள்ளி வந்தானே, அல்லக்கை. இவனுகளுக்கு எல்லாக் கட்சிகள்லயுமிருந்து சப்போர்ட பண்ணிக்கிட்டு ஆள் வந்துருது."(சொட்டாங்கல், ப.224)

என்று மதுரை மாநகரம் ரவுடிகளின் கூடாரமாக மாறுவதற்கு, பட்டப்பகலில் நடுத்தெருவில் கொலை நிகழ்வதற்கும் ஆதரவாக அரசியல் கட்சிகள் இன்று செயல்படுகின்றன என்பதை அர்ஷியா வருத்தத்துடன் தனது படைப்பில் பதிவு செய்துள்ளார்.

காவல்துறை மற்றும் நீதித்துறை அமைப்புகள் அரசியல் செல்வாக்கால் பாதிக்கப்படுகின்றன. சட்டம் செயலிழக்கும் சூழல் உருவாகியுள்ளது. இது நடப்பியல் அரசியலின் தீவிரமான வெளிப்பாடாகும்.

**அரசியல் மொழியின் மறைபொருள்**

பொதுவான சொற்களுக்கே அரசியல் அர்த்தம் வழங்கப்படும் சூழல் புதினங்களில் காணப்படுகிறது. அச்சம், கண்காணிப்பு, வன்முறை ஆகியவை அரசியல் மொழியின் மறைபொருளாக மாறுகின்றன. இத்தகைய சித்திரிப்பு சமூக மனநிலையின் மாற்றத்தைக் காட்டுகிறது.

**இருத்தலியல் கோணத்தில் அரசியல்**

அரசியல் தலைவர்கள் தங்களை நிலைநிறுத்திக் கொள்ளச் செய்யும் செயல்கள் இருத்தலியல் (Existential) கோணத்தில் புரிந்துகொள்ளப்படுகின்றன. அதிகாரத்தை இழக்காதிருப்பதே அரசியல் செயற்பாட்டின் மையமாகிறது.

இவ்வாறு அரசியல் வாழ்வியல் (Survival Politics) ஜனநாயக நெறிமுறைகளை பின்னுக்குத் தள்ளுகிறது.

**கண்டறிதல்கள்**

ஜனநாயகப் பங்கேற்பு காட்சி நிகழ்வாக மாறியுள்ளது.

அரசியல் ஆதரவு வன்முறையை உறுதிப்படுத்துகிறது.

சாதி–மத அரசியல் சமூகப் பிளவுகளை அதிகரிக்கிறது.

அதிகாரப் பாதுகாப்பு ஜனநாயக இலட்சியத்தை மீறுகிறது.

**முடிவுரை**

எஸ். அர்ஷியாவின் புதினங்கள் சமகால தமிழக அரசியல் சமூகத்தின் விமர்சனப் பதிவுகளாக விளங்குகின்றன. நடப்பியல் மற்றும் மீமெய்ம்மையியல் அணுகுமுறைகள் மூலம் ஜனநாயக இலட்சியங்களுக்கும் நடைமுறை அரசியலுக்கும் இடையிலான முரண்பாடுகள் வெளிப்படுத்தப்படுகின்றன. இவரது படைப்புகள் அரசியல் சமூக ஆய்விற்கான முக்கிய இலக்கிய ஆதாரங்களாகக் கருதப்படுகின்றன.

**துணைநூல் பட்டியல்:**

1. சொட்டாங்கல், எஸ்.அர்ஷியா.
2. பாவலர் வையவன், மனசு சுற்றிய மாவளி,
3. அப்துல் ரகுமான், பால்வீதி
4. மீரா. ஊசிகள்

Copyright © Author(s), Article DOI: https://doi.org/10.63300/tirjts06012026 